LIFESAVING SOCIETY
*The Lifeguarding Experts*

**கனடாவிற்கு புதிதாக குடிபெயர்ந்த 'சிறார்கள்' நீரில் மூழ்கும் அதிக ஆபத்தில் இருப்பதாக ஆய்வொன்று தெரிவிக்கின்றது**

*கனடாவிற்கு புதிதாக குடிபெயர்ந்த 11 - 14 வயது சிறார்கள் ஐந்து மடங்கு நீந்த இயலாத நிலையில் இருப்பதாக Lifesaving Society தெரிவிக்கின்றது*

*Toronto,ON -June 28, 2016- நீரில் மூழ்கும் அபாயத்தைத் தடுக்கும் கனடாவின் முன்னணி நிறுவனமான Lifesaving Society யினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி சிறார்கள் (11- 14 வயது) கனடாவில் பிறந்த தமது வகுப்புத் தோழர்களை விட ஐந்து மடங்கு நீரில் மூழ்கும் அபாயத்தில் உள்ளதாக அறியப்படுகின்றது. இது இவ்வாறிருக்க, கனடாவிற்கு புதிதாகக் குடிபெயர்ந்த சிறார்களில் 93 சதவீதமானோர் தாம் நீர் சம்பந்தப்பட்ட விளையாட்டுக்களில் ஈடுபடுவதாக தெரிவிக்கின்றனர்.*

*கனடாவில் பிறந்த மற்றும் புதிதாக குடிபெயர்ந்த கனடாச் சிறார்களின் நீச்சல் மற்றும் நீர் பாதுகாப்பு தொடர்பான அணுகுமுறை மற்றும் நடத்தைகளை விளங்கிகொள்வதற்காக "கனடாவில் சிறார்களின் நீச்சல் மற்றும் நீர் பாதுகாப்பில் இனங்களின் செல்வாக்கு" எனும் புதிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 2010ம் ஆண்டு இந்த அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, கனடாவில் பிறந்த குழந்தைகளை விட, கனடாவிற்குக் குடிபெயர்ந்தவர்கள் நான்கு மடங்கு நீச்சல் தெரியாதவர்களாக இருக்கலாமென கண்டறியப்பட்டது. இந்த ஆய்விற்கு மேலதிகமாக புதிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.*

*ஆய்வு முடிவுகளின்படி நீர் பாதுகாப்பு அபாயம் கனடாவில் பிறந்த சிறார்களை விட புதிதாக குடிபெயர்ந்த சிறார்களுக்கு அதிகமிருப்பதாகவும் கனடாவில் ஐந்து வருடங்களுக்குக் குறைவாக இருக்கும் சிறார்கள் கனடாவில் பிறந்தவர்களை விட ஏழு மடங்கு நீந்த இயலாத நிலமையில் இருப்பதாகவும் தெரியவருகின்றது..*

*"எமது 2010 ஆய்வு முடிவுகளின் படி கனடாவிற்கு புதிதாக வரும் குடும்பங்கள் நீர் பாதுகாப்பு மற்றும் நீச்சல் பற்றி வேறு விதமான கருத்துக்களையும், அனுபவங்களையும் கொண்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக" Lifesaving Society இன் Public Education இயக்குனர் Barbara Byers கூறுகிறார். மேலும் அவர் " நாம் குறிப்பாக சிறார்களை மையப்படுத்தியே இந்த ஆய்வுகளை மேற்கொண்டோம், சிறந்த தொடர்பாடல் மூலம் நீர் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும், நீச்சல் கற்றுக்கொள்ள அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது" என கூறுகிறார்.*

*"இந்த வயதெல்லையைக் கொண்டவர்கள் மிகவும் முக்கியமானவர்கள்" என்கிறார் Byers. "அதிக சுதந்திரத்திற்கான ஆசை இவர்களுக்கு இருந்தாலும், பெற்றோர் மற்றும் பள்ளிக்கூடங்கள் இவர்களின் நாளாந்தச் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. நீச்சல் தெரியாத நிலையில், இளம் வாலிபப் பருவத்திற்குள் நுழையும் சிறார்கள் மற்றும் பதின்ம வயதினர், அதிக ஆபத்தை எதிர்நோக்கும் வர்க்கத்தில் இருக்கின்றனர். 2016ம் ஆண்டிற்கான - கனடாவில் நீரில் மூழ்கியவர்கள் தொடர்பான அறிக்கை இதற்கு ஆதாரமாக உள்ளது. 20 - 24 வயதினரே அதிகமாக நீரில் மூழ்குவதாகவும் அது தெரிவிக்கின்றது. இந்த வயதில் மிகவும் அடிப்படையான நீர் சம்பந்தமான பாதுகாப்புத் திறன்களை வளர்த்துக் கொள்வதன் மூலம், அவர்கள் இளம் வாலிபப் பருவத்திற்குள் செல்லும்போது மிகவும் உதவியாக அமையும். "*

**ஐந்தில் ஒரு புதிய கனேடிய சிறார்கள் தமக்கு நீந்த இயலாதென தெரிவிக்கின்ற போதிலும், நீச்சலே அவர்களிடையே மிகவும் பிரபலமான நீர் தொடர்பான செயற்பாடாக விளங்குகிறது**

- *90% கனேடிய சிறார்களுடன் ஒப்பிடும் பொழுது, புதிதாக கனடாவிற்கு குடி பெயர்ந்த சிறார்களில் 68% தாம் நீச்சல் செயற்பாடுகளில் பங்கேற்பதாக தெரிவித்துள்ளனர். இருந்த போதிலும் 3% கனடாவில் பிறந்த சிறார்களுடன் ஒப்பிடும் பொழுது கனடாவிற்கு குடிபெயந்த சிறார்களில் ஐந்தில் ஒரு பங்கினர் (17%) தம்மால் நீந்த இயலாது எனவும் தெரிவித்துள்ளனர்.*

- *10% கனடாவில் பிறந்தவர்களுடன் ஒப்பிடுகையில் குடிபெயர்ந்த சிறார்கள் மூன்றில் ஒருவர் (34%) தம்மால் சிறிய அளவு மட்டுமே நீந்த முடியும் எனக் கூறியுள்ளனர்.*

- *கனடாவிற்குக் குடிபெயர்ந்த பல சிறார்கள் நீந்தக் கூடியவர்களாக இருக்கின்றபோதும், அவர்களுக்கு தமது நீச்சல் திறனில் நம்பிக்கை இல்லை. நான்கில் ஒரு புதிய குடிபெயர்வு சிறார்கள் தம்மால் நீந்த இயலும் என தெரிவிக்கும் அதேவேளை உயிர்காப்பிற்கான நீச்சல் நியமங்களான "நீச்சல் குளத்தின்*

ஆழமான பகுதிக்குள் குதித்தல், ஒரு நிமிடம் வரை தம்மை மிதக்க வைத்திருத்தல், மற்றும் பொது நீச்சல் குளத்தில் இரண்டு மடங்கு தூரத்தை நீந்துதல்" போன்ற செயற்பாடுகளை தம்மால் பூர்த்தி செய்ய இயலாதிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

- பல புதிய குடிபெயர்வு சிறார்கள் தாம் நீந்தும் போது காயப்பட்டு விடுவோம் அல்லது நீரில் மூழ்கிவிடுவோம் என பயப்படுகின்றனர் (21% கனடாவில் பிறந்தவர்களுடன் ஒப்பிடும் பொழுது 49% புதிய குடிபெயர்வு சிறார்கள்).

**கனேடிய அனுபவத்தின் ஒரு பகுதியாக நீச்சல் பழகுவது**

உலகெங்கிலும் இருந்து கனடாவிற்கு வரும் குடிபெயர்வாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்ற நிலையில் இந்த ஆய்வு நேரத்திற்கு தக்கதாக அமைகின்றது. கிட்டத்தட்ட 30,000 சிரிய அகதிகள் தமது முதலாவது கனடா நாளை ஜூலை முதலாம் திகதி கொண்டாடப்போகிறார்கள். [1] மேலும் கனேடிய புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தகவலின்படி, 2031ம் ஆண்டளவில் கனடாவின் சனத்தொகை தற்போதய சனத்தொகையிலும் பார்க்க 25% அல்லது 28% சதவீதத்தால் உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது கனடாவில் வசிக்கும் நான்கில் ஒருவர் வெளிநாட்டில் பிறந்தவராக இருப்பர். [2]

கனடாவிற்கு வரும் புதிய குடிபெயர்வாளர்களில் பலர் தமது சொந்த நாடுகளில் நீச்சல் கற்றுக்கொள்வது மற்றும் நீர் பாதுகாப்புப் பற்றிய முன் அனுபவங்கள் இல்லாதவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் கனடாவிற்கு வரும்பொழுது இங்குள்ள அளப்பரிய நன்னீர் மற்றும் நீர் சம்பந்தமான செயற்பாடுகள் அவர்களை மிகச்சிறந்த நீச்சல் அனுபவங்களை அடிக்கடி பின்பற்றத் தூண்டுகிறது. ஆய்வுகளின் படி பெரும்பாலான நீச்சல் தெரிந்த புதிய குடிபெயர்ந்த சிறார்கள் (73%) கனடாவிலேயே நீச்சல் பயிற்சியைக் கற்றுக்கொண்டனர்.

"புதிதாக கனடாவிற்கு வரும் குடும்பங்கள் நீச்சல் பயில்வதை கனேடிய அனுபவத்தின் ஒரு பகுதியாக அமைத்துக் கொள்வதை நாங்கள் ஊக்குவிக்கிறோம்," எனக் கூறுகிறார் Byers. ஆய்வுகளின் படி புதிதாக கனடாவிற்கு வரும் சிறார்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தவர்கள் நீச்சல் பயில்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கிறார்கள் - குடும்பம், கலச்சாரம், மதம், நேரப் பிரச்சினை மற்றும் நாளாந்தச் செயற்பாடுகளிலுள்ள தடைகளால் இந்த சவால்கள் ஏற்படுகின்றன. மேலும் உயிர்காப்பிற்குத் தேவையான நீச்சல் பயிற்சி போன்ற திட்டங்களை ஊக்குவிப்பதன் மூலம் இவ்வாறான சவால்களை எவ்வாறு இல்லாமல் செய்யலாம் என்பது போன்ற விடயங்களையும் இந்த ஆய்வு எமக்கு எடுத்துக் கூறுகின்றது. "

**உயிர் காப்பிற்கான நீச்சல் (Swimming to Survive)**

The Lifesaving Society இன் உயிர் காப்பிற்கான நீச்சல் (Swim to Survive) பயிற்சி 3ம் வகுப்பு மாணவர்களுக்குரிய ஒரு பாடசாலை சார்ந்த திட்டமாகும். இதில் வரிசையாக மூன்று அடிப்படை திறமைகள் கற்றுக்கொடுக்கப்படுகிறன: ஆழமான நீரில் சுழலுதல் (Roll into deep water), ஒரு நிமிடத்திற்கு கால்களை நீரின் கீழ் அடித்தபடி மிதத்தல் (Treading), 50 மீற்றருக்கு நீந்துதல். இது நியம நீச்சல் பயிற்சி முறைகளாக இல்லாத பொழுதிலும், நீர் தொடர்பாக பாதுக்காப்பாக இருக்கவும், எதிர்பாராத விதமாக திடீரென நீரில் மூழ்கும் பொழுது வாழ்வுக்கும் சாவுக்குமான வித்தியாசத்தை எற்படுத்தவும் இது முதல் படிநிலையாக விளங்குகிறது.

உயிர் காப்பிற்கான நீச்சல் + (Swim to Survive+) இந்த திட்டம் சிறார்களை (7ம் வகுப்பு) மையப்படுத்தி உருவாக்கப்பட்டது. பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து அடிப்படை நீச்சல் திறன்களான ஆழமான நீர் நிலைகளில் விழும் பொழுது உயிர் காப்புத் திறன் மற்றும் எவ்வாறு நீரில் விழுந்த நண்பர் ஒருவருக்கு உதவி புரிவது பற்றியும் விளக்குகின்றது. இது பாடசாலை நேரங்களில் நடைபெறுகின்றது, இதன் போது மாணவர்கள் சாதாரண Street Clothing இனை அணிய முடியும்.

உயிர் காப்பிற்கான நீச்சல் (Swim to Survive) மற்றும் உயிர் காப்பிற்கான நீச்சல் + (Swim to Survive+) ஆகிய இரண்டும் KEEPSAKE Foundation இனைச் சேர்ந்த ஸ்தாபக அனுசரணையாளர் Stephanie Gaetz இன் உதவியுடன் உருவாக்கப்பட்டதாகும். 2005ம் ஆண்டு தொடக்கம், ஒன்ராறியோ அரசாங்கம் - கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியுதவியின் மூலம் சுமார் ஏழு லட்சத்து ஐம்பத்தையாயிரம் மூன்றாம் வகுப்பு மாணவர்கள் நீச்சல் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். 2013ம் ஆண்டு தொடக்கம், நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஏழாம் வகுப்பு மாணவர்கள் உயிர் காப்பிற்கான நீச்சல்+ (Swim to Survive+) பயிற்சியைப் பெற்று வருகின்றனர். உயிர் காப்பிற்கான நீச்சல்+ (Swim to Survive+) நிகழ்வு ஒன்ராறியோ Trillium Foundation மற்றும் PPL Aquatic Fitness & Spa Group ஆகியவற்றின் நிதியுதவி மூலம் நடைபெற்று வருகின்றது.

சமூகத்தவர்களின் தேவைக்கேற்ப Lifesaving Society ஆனது அண்மையில் குடும்ப உயிர் காப்பிற்கான நீச்சல் (Family Swim to Survive) திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதில் பங்கு பற்றுபவர்கள் குடும்பமாக தமது நீச்சல்

*திறன்களை வளர்த்துக்கொள்ள முடியும். ஒன்ராறியோவிலுள்ள கணிசமான மாநகரசபைகள் இந்த புதிய திட்டத்தை வழங்குகின்றன.*

*ஒன்ராறியோ Trillium Foundation இன் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் ஆய்வின் மூலம் பெறப்படும் முடிவுகளால், சமூகத்திற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தொடர்பாடல்கள் முன்னேற்றப்படுவதுடன், அனைத்து கனேடியர்களும் நீரில் பாதுகாப்பாக இருப்பதும் உறுதிப்படுத்தப்படுகின்றது.*

***ஆய்வைப் பற்றிய தகவல்***

*கனடாவில் பிறந்த மற்றும் புதிதாக குடிபெயர்ந்த கனடாச் சிறார்களின் நீச்சல் மற்றும் நீர் பாதுகாப்பு தொடர்பான அணுகுமுறை மற்றும் நடத்தைகளை விளங்கிகொள்வதற்காக "கனடாவில் சிறார்களின் நீச்சல் மற்றும் நீர் பாதுகாப்பில் இனங்களின் செல்வாக்கு" எனும் புதிய ஆய்வு Lifesaving Society இனால் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுக்கு பதிலளித்தவர்கள் கனடாவில் பிறந்தவர்களும் மற்றும் கனடாவில் பிறக்காத சீனர்கள், தெற்காசிய சமூகத்தவர்கள், தென்கிழக்கு ஆசியர்கள், மத்திய கிழக்கு நாட்டினர் மற்றும் முஸ்லீம் சமூகத்தவர்களை உள்ளடக்கியது.*

*ஆய்வின் நோக்கங்கள்:*

- *கனடாவில் பிறந்த மற்றும் கனடாவிற்கு புதிதாக குடியேறிய சிறார்களின் நீர் தொடர்பான பொழுதுபோக்கு செயற்பாடுகள் மற்றும் நீச்சல் தொடர்பான திறன்கள் மற்றும் நடத்தைகளை அளவிடுவது*
- *கனடாவில் பிறந்த மற்றும் கனடாவிற்கு புதிதாக குடியேறிய சிறார்களின் நீச்சல், நீர் பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் துணிவு தொடர்பான நடத்தைகளை விளங்கிக் கொள்ளல்*
- *கனடாவில் பிறந்த மற்றும் கனடாவிற்கு புதிதாக குடியேறிய சிறார்கள் நீச்சல் கற்றுக்கொள்வது மற்றும் நீச்சல் பயிற்சிகளை மேற்கொள்வதிலுள்ள தடைகளை தீர்மானித்தல்*
- *சிறார்களை நீச்சல் கற்றுக் கொள்ள உந்தும் காரணிகளையும், எவ்வாறு தகவல் தொடர்பாடல் மூலம் உயிர் காப்பிற்கான நீச்சல்+ (Swim to Survive+) பயிற்சியின் மூலம் அவர்கள் நீச்சல் திறன்களை வளர்த்துக்கொள்ள ஆர்வத்தை தூண்டலாம் எனவும் தீர்மானித்தல்*

*மார்ச் 29, 2016 முதல் ஏப்ரல் 18, 2016 வரை திரட்டப்பட்ட தகவல்களைக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கனடாவில் வசிக்கும் 11 முதல் 14 வயதுள்ள 657 பேரின் கருத்து மாதிரிகள் இதில் பயன்படுத்தப்பட்டன. இந்த மொத்த எண்ணிக்கை - கனடாவில் பிறந்த 297 பேர் மற்றும் வெளிநாடுகளில் பிறந்த 360 பேரையும் உள்ளடக்கியது. இந்த செய்திக் குறிப்பில் இவர்கள் "கனடாவின் புதிய சிறார்கள்" என குறிப்பிடப்படுகிறார்கள். (297 பேரை மாதிரிகளாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் நிகழ்தகவு ஆய்வின் முடிவுகள் 20 இல் 19 தடவைகள் +/- 5.69 சதவீத வித்தியாசத்திற்குள் அமைந்திருக்கும். 360 பேரை மாதிரிகளாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் நிகழ்தகவு ஆய்வின் முடிவுகள் 20 இல் 19 தடவைகள் +/- 5.17 சதவீத வித்தியாசத்திற்குள் அமைந்திருக்கும்).*

*இந்த ஆய்வு Lifesaving Society சார்பில் Gadd Research and McCullough Associates இனால் மேற்கொள்ளப்பட்டது. Gadd Research 1989 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ரொறொன்டோவைச் சேர்ந்த சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி நிறுவனமாகும். நுகர்வோரின் நடவடிக்கைகள் மற்றும் அணுகுமுறைகளில் பண்பு வகை மற்றும் அளவு சார்ந்த ஆழமான ஆராய்ச்சியில் இந்த நிறுவனம் நிபுணத்துவம் பெற்றது.*

***உயிர் காப்பிற்கான நீச்சல் நிகழ்ச்சிகளைப் பற்றி***

***உயிர் காப்பிற்கான நீச்சல் (Swim to Survive)*** *3ம் வகுப்பு மாணவர்களுக்குரிய நிகழ்ச்சியாகும். இதில் வரிசையாக மூன்று அடிப்படை திறமைகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. ஆழமான நீரில் சுழலுதல்(Roll into deep water), ஒரு நிமிடத்திற்கு கால்களை நீரின் கீழ் அடித்தபடி மிதத்தல் (Treading), 50 மீற்றருக்கு நீந்துதல். (புள்ளிவிபரங்களின் படி நீரில் மூழ்கும் பெரும்பாலானவர்களின் எண்ணிக்கை கரையிலிருந்தோ அல்லது பாதுகாப்பான பகுதியிலிருந்தோ 15 மீற்றருக்கும் குறைவான பிரதேசத்திலேயே இடம்பெறுகிறது). 7 ஆம் வகுப்பு மாணவர்களுக்குரிய* ***உயிர் காப்பிற்கான நீச்சல்+ (Swim to Survive+)*** *நிகழ்ச்சியானது உயிர் காப்பிற்கான நீச்சல் (Swim to Survive) நிகழ்ச்சியில் பயிற்றுவிக்கப்பட்ட திறன்களிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளதோடு நிஜ வாழ்க்கை சூழ்நிலைகளில் தம்மை எப்படி ஈடுபடுத்துவது என்பது பற்றியும் கற்றுத்தருகின்றது.*

*அத்துடன்* ***குடும்ப உயிர் காப்பிற்கான நீச்சல் (Family Swim to Survive)*** *பயிற்சிகள், குடும்பமாக பயில்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றன. இந்தத் திட்டத்தில் பங்குபற்றுபவர்கள் தமது ஆடைகளுடனேயே நீந்துவதற்கான ஆற்றலை கற்றுக்கொள்ளவும் எவ்வாறு நண்பரொருவருக்கு பத்திரமாக உதவி செய்வது*

*பற்றியும் அறிந்து கொள்வார்கள். ஆர்வமுள்ளவர்கள் தமது பிரதேச நீச்சல் பயிற்சி தடாகத்தை தொடர்பு கொள்ளலாம் அல்லது www.lifesavingsociety.com எனும் வலைத்தள முகவரிக்குச் சென்று மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.*

***The Lifesaving Society ஐப் பற்றி***

*The Lifesaving Society ஆனது நீரில் மூழ்குவதைத் தடுக்கும் நிகழ்ச்சிகள், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் முழுமையான சேவை நிறுவனமாகும். நாம் எமது பயிற்சி வகுப்புகளான Water Smart® பொதுக் கல்வி, நீரில் மூழ்குவதைத் தடுக்கும் ஆய்வுகள், நீர் காப்பு முகாமைத்துவம் மற்றும் உயிர் காப்பு விளையாட்டு மூலமாக உயிர்களைக் காப்பாற்றுவதோடு மட்டுமல்லாமல் நீர் சம்பந்தமான காயங்கள் ஏற்படாமலும் தடுக்கின்றோம். ஒவ்வொரு வருடமும் இந்த கழகத்தில் 1,000,000 ற்கும் மேற்பட்ட கனேடியர்கள் நீச்சல், உயிர் காப்பு, உயிர் பாதுகாப்பு மற்றும் தலைமைத்துவ திட்டங்களில்  பங்கு பெறுகிறார்கள். மேலதிக தகவல்களுக்கு , www.lifesavingsociety.com  எனும் வலைத்தளத்திற்குச் செல்லவும்.*

***

*நேர்முகத் தேர்வொன்றிற்கு அல்லது மேலதிக தகவல்களுக்கு:*

Angel Tian
Focus Communications Inc.
Office: 905-305-0308 x 215
Cell: 647-988-9186
angelt@focuscomms.com

**References**

1. Government of Canada. #WelcomeRefugees: Key figures. http://www.cic.gc.ca/english/refugees/welcome/milestones.asp
2. Statistics Canada. Projections of the Diversity of the Canadian Population 2006 to 2031. http://www.statcan.gc.ca/bsolc/olc-cel/olc-cel?catno=91-551-x&lang=eng